# சர்வவியாபி

Sarvaviabi

MISSION PRESS 1840
PONDICHERRY

ESTD:1.3.1907
(Year-115)

| 05-11-2023 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சோபகிருது வருடம் (ஐப்பசி 18) | வருட சந்தா ₹ 200<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|
| புத்தகம் 60 / இதழ் 45 / பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com | | PH:0413/2334370 | ஆசிரியர்: அருட்திரு A.S.P.அகஸ்டின் |


## புனித பேதுரு பேராலயத்தில் அமைதிக்கான செபவழிபாடு



வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் அமைதிக்கான செபவழிபாடு

பகைமையால் சிறைவைக்கப்பட்டு, மோதல்களுக்கு காரணமாக இருக்கும் இதயங்களின் மனமாறலுக்கு அமைதியின் அரசியாம் அன்னை மரியா உதவவேண்டும் என அழைப்புவிடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இஸ்ராயேல் மற்றும் பாலஸ்தீனாவிற்கு இடையே இடம்பெறும் மோதல்கள் முடிவுக்கு வரவேண்டும் மற்றும் உலகில் அமைதி நிலவ வேண்டும் என அக்டோபர் 27ஆம் தேதியை செபம் மற்றும் உண்ணாநோன்பின் நாளாக அறிவித்து அன்று மாலை, வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் அமைதிக்கான செபவழிபாடு ஒன்றை நடத்திய திருத்தந்தை, அமைதியின் பாதையைத் தேர்ந்தெடுக்க உலகின் தலைவர்களைத் தூண்டவும், அதிகார மோகம் மற்றும் பகையால் குருடாயிருக்கும் மக்களை ஒப்புரவிற்கு கொணரவும் அன்னை மரியா உதவவேண்டும் என செப வேண்டுதல் செய்தார்.

அமைதிக்கான செபவழிபாட்டிற்கு அக்டோபர் மாதம் 18ஆம் தேதியே அழைப்புவிடுத்து இவ்வெள்ளியன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த செபவழிபாடு, விவிலிய வாசிப்புகள், செபம், அமைதி தியானம், செபமாலை, நற்கருணை வழிபாடு போன்றவைகளை உள்ளடக்கியதாக இருந்தது.

எங்களையும் எங்கள் பிரச்சனைகளையும், எதிர்காலம் குறித்த ஏக்கங்களோடும் அச்சங்களோடும் அன்னை மரியாவிடம் ஒப்படைக்கிறோம் என இவ்வழிபாட்டின்போது செபித்த திருத்தந்நை பிரான்சிஸ் அவர்கள், ஏனெனில், இவ்வுலகை துண்டாக்கிவரும் போர்கள் மற்றும் மோதல்களால் துன்புறும் உம் குழந்தைகளோடு இணைந்து நீரும் துன்புறுகிறீர் என அன்னை மரியாவை நோக்கி எடுத்துரைத்தார்.

அமைதியின் பாதையை விட்டு விலகியுள்ள இவ்வுலகின் மீது உம் பார்வையைத் திருப்பி, அவர்களை போர் மற்றும் மோதல்களின் ஆபத்திலிருந்து காப்பாற்றியருளும் என அன்னை மரியாவை நோக்கி வேண்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக மக்களுக்கான அன்னையின் பரிந்துரையை நாடினார்.

வாழ்வு குறித்து அக்கறையுள்ளவர்களாகவும், கடவுளுக்கு முதலிடம் கொடுப்பவர்களாகவும் இவ்வுலக மக்கள் மாறிட உதவியருளும் என அன்னை மரியாவை நோக்கி வேண்டிய திருத்தந்தை, குழந்தைகளின் கண்ணீரைத் துடைத்தருளும், முதியோர் மற்றும் தனிமையில் வாடுவோர் நடுவே இருந்தருளும், காயம் பட்டோருக்கு ஆறுதலையும், புலம்பெயர்ந்தோருக்கு பாதுகாப்பையும், வீழ்ச்சியடைந்தோருக்கு ஆறுதலையும் வழங்கி அவர்களில் புது நம்பிக்கைகளை விதைத்தருளும் என மேலும் வேண்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், இன்று உலகை, குறிப்பாக, போரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை அன்னை மரியாவுக்கு அர்ப்பணிப்பதாகவும் இச்செபவேளையின்போது கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உலக அமைதிக்கான இந்த செப வேளையில் அனைத்துக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவரும் இணைந்து செபிக்க வேண்டும் என திருத்தந்தை ஏற்கனவே கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எண்ணற்றோர் புனித பேதுரு பெருங்கோவிலில் இடம்பெற்ற அமைதி ஜெபவழிபாட்டில் கலந்துகொண்டனர்.

ஆசிரியர் பேனா.

# நாம் இயேசுவின் ரசிகனா? சீடனா?

இயேசுவுக்கு ரசிகனாக இருப்பது ரொம்ப ஈஸியான வேலை.

இன்றைக்கு 99 சதவீத கிறிஸ்தவர்கள் அப்படித்தான் இருக்கிறோம்.

ஒரு பிரமாதமான பிரசங்கத்தை கேட்கும்போது, அல்லது இயேசுவைப் பற்றி வழுவழு தாள்களில் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தைப் படிக்கும்போது,

அட அட... என்ன ஒரு மனுஷன் இயேசு பேஷ் பேஷ் என்று உச் கொட்டுகிறோம்.

ரசிகனுக்கு என்று பெரிய பொறுப்புகள் எதுவும் கிடையாது. கரகோஷம் எழுப்ப வேண்டும். அவ்வப்போது கொடி பிடிக்க வேண்டும். அதில் பெரிய கஷ்டம் இல்லை. கொஞ்ச நேரம் கோஷம் போடலாம். போரடித்தால் வீட்டுக்கு போகலாம். தன் தலைவனோடு ஓரளவிற்கு மேல் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ரசிகனுக்கு இல்லை. இயேசு ரசிகர்களாக நாமும் இதையே செய்கிறோம். இயேசுவை நெருங்க விட்டால்தானே பிரச்சினை. அவரை தூரமாக நிற்க வைத்து ஒரு விசில் போடுவதில் என்ன வந்துவிடப் போகிறது? அகில உலக இயேசு விசிறிகள் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் நாம்.

கலப்பையில் கை வைத்த பின் திரும்பி பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்பட தகுதியுள்ளவர் அல்ல. (லூக்கா 9:62) இது தான் இயேசு மூன்றாம் ஆளுக்கு கொடுக்கிற பதில். இதில் உள்ள செய்தி வெளிப்படை யானது. பாலஸ்தீன விவசாய பூமியிலிருந்து ஓர் அழகான உவமையை கவர்ந்து, அதன் மூலம் இயேசு அந்த நபருக்கு ஒரு பளீர் பதிலை தருகிறார். இதோ பாருப்பா, என் சீடனாக இருக்க ஆசைப்பட்டால், பராக்கு பார்க்காதே. கவனச்சிதறல் இயேசுவுக்கு பிடிக்காத ஒன்று.

<u>**Sinlge - Minded focus is what Jesus wants of his disciple.**</u> வேலையிலேயே கவனம் இருக்கட்டும். பிலிப்பியர் திருமுகத்தில் புனித பவுலடியார் அழகாக சொல்வார். கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதைக் கண்முன் கொண்டு, பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன். (பிலிப் 3:13-14). இதில் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை.

ஒன்று, கடந்ததை மறப்பது. இரண்டு, இலக்கை எப்போதும் கண்முன் வைத்திருப்பது. அதுதான் இயேசு விரும்பும் சீடனின் பண்புகள், இயேசுவின் சீடத்துவம் ஒரு தீவிரமான உழைப்பைக் கோருகிறது. இதில் பாசாங்கான உபசரிப்புகளுக்கும், மரியாதைகளுக்கும், ஒப்பாரி களுக்கும் இடம் இல்லை. நூறு மீட்டர் ஓட்டபந்தயத்தில் ஓடுகிறவன். இடையிலேயே நின்று தன் நண்பனை, எப்படிடா இருக்கிறாய்? என்று குசலம் விசாரித்தால் அவன் ஜெயிக்க முடியுமா நிச்சயமான வாழ்வில் கடவுளின் பராமரிப்பின் மீது நம்பிக்கை வைத்து, இயேசுவுக்கே எல்லாவற்றிலும் முதலிடம் தந்து, மனதை சிந்தனையை ஒரு முகப்படுத்தி எவன் இலக்கை நோக்கி ஓடுகிறானோ. அவனே இயசுவின் சீடன்.

**சீடனுக்கு அழகு விசுவசிப்பது**

"To see is to believe" என்கிற சொல்லாடல் ஆங்கிலத்தில் உண்டு.

பார்ப்பது விசுவாசிப்பதற்கே காணுதல் என்பது யோவான் நற்செய்தியில் ஓர் ஆழமான விவாசத்திற்கான அழைப்பாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் 1:38-39-ல், "ரபி, நீ எங்கே தங்கியிருக்கின்றீர்?" என்று கேட்கும் சீடர்களிடம், இயேசு, "வந்து பாருங்கள்" என்கிறார். அந்த பார்த்தல் அவர்களுக்கு இயேசு குறித்த விசுவாசத்தை தருகிறது.

அடுத்த நாள், தன் சகோதரர் பேதுருவை போய் சந்திக்கும் அந்திரேயா தடாலடியாக, "நாங்கள் **மெசியாவைக் கண்டோம்**" என்று அறிக்கையிடுகிறார். (14).

யோவான் 4:29-ல், இயேசுவுடன் கிணற்றடியில் பேசி முடித்தவுடன், ஊருக்குள் ஓடிச்செல்லும் சமாரியப் பெண் அங்குள்ளவர்களிடம், "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் **மெசியாவாக** இருப்பாரோ" என்று சொல்லி அழைக்கிறாள். அவர்களும் போய் பார்க்கிறார்கள். அந்த அத்தியாயத்தின் முடிவில், சமாரியர்கள் எல்லாரும் இயேசுவை நம்பியதாக யோவான் எழுதுகிறார்.

பத்து பேர் படித்து படித்து சொல்லியும் நம்பாமல் சவடால் விட்டு திரிந்த தோமா, இயேசுவைக் கண்டதுமே, "நீரே என் ஆண்டவர் நீரே என் கடவுள்" என்று சொல்வதை 21:28-ல் நாம் பார்க்கிறோம். காணுதல் என்றால் யோவானை பொறுத்த மட்டில் விசுவாசித்தல் ஆகும்.

20:1-10 பகுதியில், அன்புச் சீடர் இரண்டு முறை "இயேசுவின் இறப்புத் துணிகளைக் கண்டதாக யோவான் குறிப்பிடுகிறார். முதலில், கல்லறைக்கு வெளியிலிருந்து, அவர் குனிந்து துணிகளை கண்டார். (20:5), இரண்டாவது, பேதுரு வந்தவுடன், அவருடன் கல்லறைக்குள் போய் மீண்டும் ஒரு முறை கண்டார். (20:8). அதன் பின்னர் என்ன நடக்கிறது?

யோவான் இரத்தினச் சுருக்கமாக இரண்டே வார்த்தைகளில் சொல்கிறார். அன்புச் சீடர். கண்டார். நம்பினார் (20:8).

காலிக் கல்லறையும், இறப்புத்துணிகளும் இயேசு அவர்களுக்கு விட்டு சென்ற ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை கண்டதும். அன்புச் சீடர் அதை தாண்டிய ஓர் ஆழமான உண்மை. இயேசு உயிர்த்துவிட்டார் என்பதே.

நாம் இயேசுவின் ரசிகனா? சீடனா?

**- அஸ்பா -**



12-11-2023

# விழிப்பாய் இருங்கள்

அருள்திரு. A. தெய்வநாயகம்
பங்குதந்தை, கிருஷ்ணன்குப்பம்.



மனித வாழ்வு என்பது இறைவன் கொடுத்த மிகப்பெரிய கொடை. அதை நிறைவாகவும் முழுமையாகவும் மகிழ்வாகவும் வாழ கற்றுக் கொள்கிறவன் கடவுளை கண்டடைகிறான். மனித வாழ்வை சிறப்பாக வாழ கடவுளின் ஞானம் அவசியமாகிறது.

**ஞானம்**

ஞானம் என்பது திருச்சட்டத்தின் வழியில் ஒழுகுவதே ஆகும். ஞானத்தின் மீது அன்பு செலுத்துவது அதன் சட்டங்களை கடைபிடிப்பதாகும் சட்டங்களைக் கடைப்பிடிப்பது அழியாமைக்கு உறுதி தரும் ” (சாஞா 6:18). ஞானம் ஒளி மிக்கது மங்காதது, ஆற்றல் கொண்டது, அறிவுடையது, தூய்மையானது, தனித்தன்மை வாய்ந்தது, பலவகைப்பட்டது, நுண்மையானது, உயிரோட்டம் உள்ளது, தெளிவு மிக்கது, மாசுபடாதது, வெளிப்படையானது, கேடுறாதது, நன்மையை விரும்புவது, கூர்மையானது (சா ஞா 7:22).

இன்றைய திருவழிபாடு இயேசுவின் இரண்டாம் வருகையை மையப்படுத்தி இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு விழிப்பாய் இருந்து, ஞானத்தை பெற்ற பிள்ளைகளாக அன்பு செய்து, நம் கடமைகளை சரியாக கடைபிடித்து இயேசுவை கண்டுகொள்ள அழைப்பு விடுக்கிறது இன்றைய இறை வாசகங்கள். ஞானத்தை நாம் பெற அன்பு செய்ய வேண்டும். தேடல் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் ஞானத்தை தேடி கண்டறிபவர்களாக வாழ முயற்சி செய்ய வேண்டும். கடவுள் கொடுத்த உயரிய அன்பின் சட்டத்தை கடைபிடித்து வாழ்வதே ஞானத்தை பெற்றுக் கொள் வதற்கான வழி. ஞானத்தை தேடி, அதனை நீதியோடு செயல்படவும், அதன் அறிவுரைகளை ஏற்று, திருச்சட்டத்தின் வழியாக வாழ வேண்டுமென்ற அழைப்பை இன்றைய முதல் வாசகம் நமக்குத் தருகிறது.

**நம்புங்கள்**

இயேசுவின் இரண்டாம் வருகை உடனடியாக நிகழ இருக்கிறது என்று எதிர்பார்த்திருந்த விசுவாசிகளுக்கு, இரண்டாம் வருகையின் காலதாமதம் ஒரு விதமான ஐயத்தையும், பதற்றத்தையும் ஏற்படுத்தியது. இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருந்த பல விசுவாசிகள் இறந்து போனார்கள். எனவே வாழ்ந்து கொண்டிருந்த கிறிஸ்தவர்கள், இறந்து போன விசுவாசிகளை குறித்து மிகவும் கவலைக்குள்ளாயினர். இவர்களின் நம்பிக்கை தளர்வை போக்கி நாம் எப்படி வாழ வேண்டும் என்று விளக்கத்தை தருகிறார் தூய பவுல். இறந்தோரைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம். இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரை கடவுள் அவருடன் அழைத்து வருவார். ஆண்டவருடைய வார்த்தையின் படி நாம் வாழ அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் வரும் நாளில் அவரில் நம்பிக்கை கொண்டு அனைவரும் அவரோடு செல்வோம். வாழும்போது இறை வார்த்தையை சொல்லி ஒருவர் ஒருவரை தேற்றிக் கொள்ளுங்கள் என்று தெசலோனிக்க மக்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

**பத்து தோழியர் உவமை**

இந்த உவமை யூத மக்களின் நடைமுறை வாழ்வைப் பின்புலமாக கொண்டுள்ளது. மணமகனை வரவேற்று அவரோடு மணமகள் வீட்டில் நுழைய மாலை வேளையில் மணமகளின் தோழியர் காத்திருப்பர். மணமகன் காலம் தாழ்த்தி இரவில் கூட வந்து சேரலாம். இதையெல்லாம் சரியாக கணித்து மணமகளின் தோழியர் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஏனெனில் மணமகன் வரும் நேரம் தெரியாது. இரவு தேவைப்படும் விளக்குகள், எண்ணெய் போன்றவை தயாராயிருக்க வேண்டும். ஆகவே அவர்கள் மனமகனை வரவேற்பதில் முன் யோசனையோடும் விவேகத்தோடும் செயல்பட வேண்டும். அப்படி செயல்படாதவர்களின் நிலை பரிதாபத்துக்குரியது.

இயேசு கிறிஸ்து வெற்றிகரமாக மீண்டும் வரும் நாளும், நாழிகையும் நாம் அறியாத நிலையிலே, தயார் நிலையில் எப்போதுமே இருக்க வேண்டும் என்பதையே இந்த உவமை தெளிவுபடுத்துகிறது. மணமகன்,தோழியர், மணவிழா போன்ற திருமண உருவகங்கள் வழியாக நிறைவு காலம் பற்றிய சிறப்பான சிந்தனைகள் இங்கே இடம் பெற்றுள்ளன. எரியும் விளக்குகள் நம்மிடையே தொடர்ந்து செயல்பட வேண்டிய நம்பிக்கை, எதிர்நோக்கு உணர்வுகளை குறிக்கும். நமது இறை நம்பிக்கை தொடர்ந்து கொழுந்து விட்டு எரிந்தால் தான் நாம் இயேசுவை சந்திக்க கூடிய தயார் நிலையில் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.விழிப்பாயிருத்தல் என்பது நிகழ் காலத்தில் நாம் செய்ய வேண்டிய செயல்களை சரியாக கவனமாக அக்கறையோடு செய்ய வேண்டியதை குறிக்கிறது. விழிப்பற்ற நிலை என்பது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட செயலை அவ்வப்பொழுது செய்யாமல் எதிர்காலத்தில் செய்து கொள்ளலாம் என்று காலம் தாழ்த்தி நேரத்தை வீணடிக்கும் செயலாகும். எனவே ஆண்டவரின் வருகைக்காக எதிர்பார்த்திருக்கும் நாம் இன்று இப்பொழுது நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட வாழ்வை சரியாகவும் கவனமுடனும் வாழ்ந்து இறையரசுக்குரிய பிள்ளைகளாக வாழ இறைவனை வேண்டுவோம்.

## உலக ஆயர் பேரவையின் இறுதி அறிக்கை முன்வரைவு குறித்த வாக்கெடுப்பு

உலக ஆயர் மாமன்ற இறுதி ஏட்டின் சுருக்கத்தினை முதலில் தனித்தனியாகவும், பின்னர் குழுவாகவும் அங்கத்தினர்கள் வாசித்தபின் வாக்கெடுப்பு இடம்பெறும்.

அக்டோபர் மாதம் 4ஆம் தேதி முதல் இடம் பெற்றுவரும் உலக ஆயர் பேரவை மாநாட்டின் இறுதி அறிக்கையின் முன்வரைவு குறித்து ஆயர் மாமன்றத்தின் விவாத குழுக்களிடமிருந்து 1125 கருத்துக்களும், தனிப்பட்டவிதத்தில் 126 கருத்துக்களும் சேகரிக்கப் பட்டுள்ளதாக அக்டோபர் 27 வெள்ளிக்கிழமை பிற்பகலில் நடந்த கூட்டத்தில் அறிவித்தார் முனைவர் பவுலோ ரூபினி.

இக்கருத்துக்கள் அனைத்தும் கணக்கில் எடுக்கப்பட்டு, இறுதி அறிக்கையின் முன்வரைவில் மாற்றம் கொணரப்பட்டு, சனிக்கிழமையன்று காலை இத்தாலியம் மற்றும் ஆங்கிலத்தில் மாமன்றத்தில் முன்வைக்கப்படும் என்ற திருப்பீட சமூகத்தொடர்புத் துறையின் தலைவர் முனைவர் ரூபினி அவர்கள், இந்த ஏட்டின் சுருக்கத்தினை முதலில் தனித்தனி யாகவும், பின்னர் குழுவாகவும் அங்கத்தினர்கள் வாசித்தபின் வாக்கெடுப்பு இடம்பெறும் என தெரிவித்தார்.

இறுதி ஏட்டின் சுருக்கமும், வாக்கெடுப்பின் விவரமும் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் எனவும் அறிவித்தார் முனைவர் ரூபினி.

ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் மடிகணனி வழியாக, இந்த இறுதி ஏட்டுச் சுருக்கத்தின் ஒவ்வொரு பகுதி வாரியாக வாக்கெடுப்பு இடம் பெறும் என மேலும் கூறிய முனைவர் ரூபினி அவர்கள், மூன்றில் இரண்டு பகுதி வாக்குப் பெற்றவைகள் யாவும் ஒப்புதல் பெற்றவைகளாக கருதப்படும் எனவும் கூறினார்.

இந்த ஆயர் மாமன்றத்தின் இறுதி நிகழ்வாக ஆகஸ்ட் 29, ஞாயிற்றுக்கிழமையன்று, காலை இத்தாலிய நேரம் 10 மணிக்கு வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் திருப்பலி நிறைவேற்றப் படுவதுடன் இந்த ஆயர் மாமன்றக் கூட்டம் நிறைவுக்கு வரும். இதன் தொடர்ச்சியாக அதன் இறுதிக்கூட்டம் 2024ஆம் ஆண்டு அக்டோபரில் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## இயேசுவின் பெண் சீடர்களும் வாழ்வில் துன்பத்தை அனுபவித்தவர்கள்

பயம் குழப்பம் போன்ற தருணங்கள் இயல்பானது என்றும் அத்தகைய தருணங்களில் இறைவன் நம் பக்கத்தில் நடக்கின்றார்.

இயேசுவின் சீடர்களில் ஆண்களோடு கூட சில பெண்களும் சீடர்களாக இருந்தார்கள். அவர்கள் அனைவரும் மிகச்சரியானவர்களோ, திறமையான வர்களோ வானதூதர்களோ அல்ல மாறாக அவர்கள் அனைவரும் வாழ்வின் தீமையினால் பாதிக்கப்பட்ட வர்கள் என்றும் அத்தகையவர்கள் இயேசுவின் இரக்கம் மற்றும் மென்மையால் வரவேற்கப்பட்டு குணப்படுத்தப் பட்டவர்கள் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்டோபர் 30 திங்கள் கிழமை வத்திக்கானில் அருள்பணி Luigi Ciotti அவர்களுடன் வந்திருந்த மாப்பியாவிலிருந்து வெளியேறிய பெண்கள் குழுவைச் சந்தித்த போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விவிலியத்தில் நாம் காணும் மரிய மதலேனாள் மற்றும் பிற பெண் சீடர்கள் இயேசுவுடன் விடுதலைப் பாதையில் உடன்நடந்தவர்கள் என்றும் எடுத்துரைத்தார்.

உள்மன விடுதலை பெறுவது என்பது மந்திரத்தால் நடைபெறும் ஒன்று அல்ல, மாறாக இறைவனுடன் இணைந்து நடப்பதால் நமக்குக் கிடைப்பது என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அவருடைய பாதைகள், வழிகள் மற்றும் சிலுவைகளின் வழியாக நாம் உயிர்ப்பின் பாதையில் வழிநடத்தப் படுகின்றோம் என்றும் எடுத்துரைத்தார்.

குற்றங்கள் பல புரியும் மாப்பியா குழுவில் பிறந்த அப்பெண்கள் அக்குழுவை விட்டு வெளியேற முடிவு செய்துள்ளது நல்ல தேர்வு என்று பாராட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பயம் குழப்பம் போன்ற தருணங்கள் இயல்பானது என்றும் அத்தகைய தருணங்களில் இறைவன் நம் பக்கத்தில் நடக்கின்றார் நாம் தனியாக இல்லை என்று உணரவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அப்பெண்கள் குழுவிற்கு நற்செய்தி புத்தகம் ஒன்றினைப் பரிசளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அதனை எப்போதும் கைகளில் பைகளில் வைத்திருந்து ஒரு நாளைக்கு ஒரு முறை சிறிய பகுதியை வாசித்து இறைவன் நம் உடன் நடக்கின்றார் என்பதை உணர்ந்து வாழும்படி வலியுறுத்தினார்.

இயேசு நம்மோடு நடக்கின்றார், அவரது சிலுவை நம் வாழ்விற்கு அர்த்தத்தைத் தருகின்றது அவருடைய உயிர்ப்பின் நம்பிக்கைக்கு ஆதாரமாக விளங்குகின்றது என்று கூறிய திருத்தந்தை அவர்கள், நற்செய்தி உங்களுக்கு நல்லது செய்யும் உங்கள் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் என்றும் கூறினார்.



## 60 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

### அருட்பணி பியர் கையே MEP

ME தமிழாக்கம் Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.


ஒரு குருவின் வாழ்க்கை பெருமளவு துன்பமும் சிறிதளவே ஆறுதலும் நிரம்பியது என்பது உண்மையாகுமா? மேகமாயும் இருட்டாயும் ஒளியற்ற பாலைவனமாகவும் பாழ்பட்ட நிலமாகவும் சூரிய ஒளியற்றதாகவும் இருக்கும் என்பது உண்மையா? இல்லை. அது உண்மையல்ல. இதற்கு மாறுபட்டதை நீங்கள் படித்திருக்கலாம் அல்லது கேள்வியுற்றிருக்கலாம். ஆனால் அது உண்மையல்ல என்று என்னால் எண்பிக்க முடியும் என்று நினைக்கிறேன். அதன் உண்மைநிலையை நேருக்கு நேர் ஆராய்ந்து பார்ப்போம்.

மற்ற நாடுகளிலுள்ள குருக்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்காமல் நாம் எந்த இடத்தில் வாழ்கிறோமோ அதாவது தென்னிந்தியாவில் வாழ்கிறோம் என்றால் இங்குள்ள சூழ்நிலைக்கேற்ப பார்ப்போம்.

நாம் காணும் குருக்களின் வாழ்க்கை மிகவும் கனடிமானதா ? சந்தேகமே இல்லை. நான் உங்களுக்குக் கூறியது போல குருக்களானாலும் மற்ற மக்களானாலும் அவரவர்களுக்கும் அவர்களுக்கே உரிய இடர்பாடுகள் உண்டு சிலுவைகளும் உண்டு. அவற்றிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள எதிர்பார்க்க முடியாது. ஆனால் அந்தச் சிலுவை மற்ற மனிதர்களுக்கு இருப்பதைவிட பாரமானவையா? இல்லை.

தன்னுடைய கற்பு, தனிமை, மணத்துறவு என்று தான் எடுத்துக்கொண்ட உறுதிமொழியால் தன்னைத் தண்டனைக்கும் கண்டனத்துக்கும் உட்படுத்திக்கொள்கிறார். அவர் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. தனக்கென சொந்தமாக வீடு வைத்துக்கொள்ள முடியாது. எனவே அவருக்கு இல்வாழ்க்கைக்குரிய அனைத்து இன்பங்களும் ஆறுதல்களும் மறுக்கப்படுகின்றன. அது ஒரு நிச்சயமான நிபந்தனையாகும். ஆனால் அது ஒரு பெரிய தியாகம் என்றாகிவிடுமா? இதனை நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு இது ஒரு தியாகமே அல்ல. வேறு விதத்தில் பார்த்தால் இறைவன் என்னைக் குடும்ப இடுக்கண்களில் இருந்து பாதுகாத்தமைக்கு நன்றியுள்ளவனாகவும் நல்லாசி பெற்றவனாகவும் கருதுகிறேன். நான் அநேக மற்றும் இந்தியக் குடும்பங்களோடு தொடர்பு கொண்டுள்ளேன். நான் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் உள்ள நல்ல குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் பல குடும்பங்கள் சரியாகப் புரிந்துகொள்ளாமையாலும் சண்டை சச்சரவுகளாலும் இதயத்தை எரித்துவிடும் உணர்ச்சிகாளலும் கண்ணீராலும் சோகங்களாலும் நிறைந்துள்ளன...

அநேக குடும்பங்களில் திருமண வாழ்க்கையின் மகிழ்ச்சி நிச்சயமற்ற ஒன்றாகவும் பலவீனமான ஒன்றாகவும் உள்ளதே! இவையெல்லாம் எல்லாருக்கும் தெரியுமா? கடவுள் தம் இரக்கத்தினால் இது போன்ற தொல்லைகளில் இருந்து காத்திருக்கிறார். உங்கள் பலவீனமான தோள்களுக்கு இச்சோதனைகள் எல்லாம் மிக பளுவானவை, அவை உங்கள் ஆன்மாவையும் பேரின்ப வீட்டையும் தகர்த்துவிடும் என்று அவருக்குத் தெரியும். மேலும் குருக்கள் தனித்து பணிசெய்து அல்லது வாணிபம் செய்து தங்களைப் பணக்காரர்களாகவோ, செல்வாக்கு மிக்கவர்களாகவோ ஆக்கிக்கொள்ள தடைசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களுக்குத் தரப்படுகின்ற மிகச் சிறிய படியைக் கொண்டு திருப்தியடைய வேண்டும். அச்சிறு தொகை அவர்களை ஆடம்பர வாழ்வுக்கு அனுமதிக்காது. ஆனால் அத்தகைய ஏழ்மை நிலை உண்மையாகத் துன்பப்படுதலை உணர்த்துமா? நாம் செல்வச் சிறப்புள்ள அரண்மனையில் பிறந்திருந்தாலோ அல்லது இளவரசிகளின் மடி மீது சீராட்டப்பட்டிருந்தாலோ நமக்கு இது கடுமையானதாகத் தோன்றும். ஆனால் விதி முறைப்படி தன் பிரதிநிதிகளை உலகில் அரண்மனைகளில் காண கடவுள் விரும்பவில்லை. அத்தகைய பிறப்பின் உரிமையைக் கோரவில்லை. அவ்வாறிருக்கையில் பெரும்பாலான குருக்கள் வசதி படைத்த பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் கொண்டவர்களே. பிறகு ஏன் அவர்கள் கூச்சலிட வேண்டும்? அது ஏனெனில் தலை சாய்க்க ஒரு கல்லைக் கூட வைத்துக்கொள்ள வசதியில்லா இயேசுவின் சீடராக இருப்பதாலே



Fr.Gayet

இது ஒரு குருவின் மன்னிக்க முடியாத விவேகமற்ற செயலாகும். ஏனெனில் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிவாழ்வு மற்றவர்களுடையதைவிட சுகமாகவும் பல உரிமைகளுடனும் வாழ்வதற்காகவா? இதனை யார் உங்கள் மனதில் புகுத்தியவர்கள்? அது தெய்வீக தலைவரும் அல்ல, திருஅவையும் அல்ல. புனிதர்களும் அல்ல.

நீங்கள் கட்டாயம் ஏழையாய் இருப்பீர்கள், அது நிச்சயம். நீங்கள் ஏழையாய் இருந்தபோதும் குறைந்த பட்சம் உங்களைச் சரியாக உடுத்திக்கொள்ள ஆடையும் மூன்று வேளையும் உணவும் குறைந்த பட்சம் ஒரு நாட்டின் குடிமகனுக்குரிய நிலையில் குறையாமலும் கொண்டிருப்பீர்கள். பெரும்பாலோர் நீங்கள் நோயுற்றால் அல்லது உடல் நலம் குன்றினால் என்னவாகும் என்று கேட்கலாம். உங்களுக்கு ஏதேனும் ஏற்படுவதற்கு முன்னரே உங்களுக்கு என்ன நேர்ந்தாலும் உங்கள் எதிர்காலம் உறுதிசெய்யப்பட்ட ஒன்றாக இருக்கிறது. நீங்கள் அனாதையாகவோ கைவிடப்பட்டவராகவோ விடப்பட மாட்டீர்கள். அநேகர் தங்களுக்கு இத்தகைய உறுதியைத் தர தயாராக இருக்கிறார்கள்.

நீங்கள் ஒரு நல்ல குருவாக இருக்கும்போது உங்களுடைய சொந்த ஏழ்மை உங்களைத் துன்பத்திற்குள்ளாக்காது, மற்றவர்களின் ஏழ்மையே உங்களுக்குத் துன்பத்தைத் தரும். உங்களுடைய பங்கு மக்களின் குறைகளோடு உங்கள் துன்பங்களை ஒப்பிடும்போது உங்களிடமுள்ள சிறிய அளவு ஏழ்மை உங்களை வெட்கப்படுத்துவதில்லையா? நாம் பங்கு மக்களின் தந்தையாக தாயாக இருக்கும்போது அவர்களின் குழந்தைகள் அரைநிர்வாணமாகவும் பசி பட்டினியால் செத்துக்கொண்டும் இருக்கும்போதும் நம்முடைய குறைகளைப் பெரிதுபடுத்திக்கொண்டு சுக வாழ்வுக்காக முறையிடுவது வெட்கமாக இல்லையா?

தொடரும்



# அறுவடை மிகுதி

## லூக்.10.1-3

**சகோ. அ. ஆரோக்கியதாஸ்,** திண்டிவனம்.

தொடர்ச்சி....

சிலுவையில் இயேசு நமக்காக சிந்திய இரத்தத்தினால் தூய ஆவியார் மூலம் கிறிஸ்துவர்களின் உடலில் தங்கி அவர்களை கடவுளின் ஆலயமாக மாற்றுகிறார். கிறிஸ்துவர்கள் மட்டுமே ஒருவருக் கொருவர் ஊக்கமூட்டவும், ஒருவருக்கொருவர் வளர்ச்சியடையவும் செய்ய முடியும். இதற்கு முக்கியமான ஒன்று உலகைச் சார்ந்த மதிப்பீடுகளை நாம் முற்றிலும் துறந்துவிட்டு, இயேசு கிறிஸ்துவின் சாயலோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும். முழு தூய்மையை இயேசுவின் இரண்டாம் வருகையில்தான் நாம் உணர்ந்து அனுபவிக்கும் நிலையை அடைய முடியும். அப்போது நம் உடலில் உள்ள ஆன்மா மற்றும் ஆவி அளவில் தூய ஆவியாரால் தூய்மைப்படுத்தப்பட்டு முழு மாற்றம் அடைவோம். அதுவரையில் தூய பவுல் குறிப்பிடுவதை போல சிறிஸ்து இயேசு என்னை ஆட்கொண்டதற்கான நோக்கம் நிறைவேற்றுவதற்காக தொடர்ந்து ஓட வேண்டும்.

இயேசுவின் திருமுழுக்கின்போது... இயேசு திருமுழுக்கு பெற்ற உடனே தண்ணிரை விட்டு வெளியேறினார். உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ஆவியார் புறா இறங்குவது போலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார். அப்பொழுது "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு பூரிப்படைகிறேன்" என வானத்தி லிருந்து ஒரு குரல் கேட்டது. அதன் பின் இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காகப் பாலை நிலத்திற்கு தூய ஆவியாரால் அழைத்துச் செல்லப்பட்டார். சோதனையின் இறுதியில் இயேசு அதனைப் பார்த்து, "அகன்றுபோ சாத்தானே", என்றார். அலகை அவரைவிட்டு அகன்றது. உடனே வான தூதர் வந்து அவருக்குப் பணிவிடை செய்தனர். கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையை பொழிந் தருளினார். கடவுள் அவரோடு இருந்த தால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார். "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது. மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று கூறினார்.

எது நற்செய்தி? கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகன் இயேசுவே வெளிப்படுத்தியுள்ளார். கடவுள் வடிவில் விளங்கிய இயேசு தம்மையே அவரை வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றினார். யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்ற ஊரில், தாவீதின் வழிமரபினரான யோசேப்புக்கு மண ஒப்பந்தமான மரியா என்ற கன்னியிடம் பிறந்தார். இது எல்லா மக்களுக்கும், பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி என்றும், இவர் ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் மக்களுக்காக பிறந்திருக்கிறார் என்றார் வானதூதர்.

இயேசுவின் போதனையின் போது அவரது சொல்லுக்கும், செயலுக்கும் அடையாளங்களுக்கும் கட்டுப்பட்டு தம்மிடம் வரும் பெரும் திரளான கூட்டத்தைக் கண்டு இயேசு பெருமை கொள்ளவில்லை. அவர்கள் மேல் பரிவு கொள்கிறார். அவர்களின் நிலையை ஆயர் இல்லா ஆட்டு மந்தைக்கு ஒப்பிட்டு பார்க்கிறார். சரியான வழியில் நடத்தி, இறையாட்சி பணியில் ஆர்வமுடன் பணியாற்ற கூடிய பணியாளர்களின் பற்றாக்குறையை சுட்டிக்காட்டுகிறார். அறுவடையின் ஆண்டவர் அர்ப்பண உணர்வுடன் பணியாற்ற கூடிய பணியாளர்களைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்க இறை வேண்டலின் தேவைகளையும் இயேசு கூறுகிறார்.

➡ தொடரும்...


## மிஷன் அச்சகத்தில் கிடைக்கும் புத்தகங்கள், புதுச்சேரி - 605001

**வணக்கமாதங்கள்**

| | | |
|---|---|---|
| இயேசுவின் திரு இருதய வணக்க மாதம் | --- | 100.00 |
| உத்திரிக்கிற ஆத்துமாக்களின் வணக்க மாதம் | --- | 100.00 |
| புனித கன்னி மரியாயின் வணக்க மாதம் | --- | 100.00 |
| புனித சூசையப்பர் வணக்க மாதம் | --- | 100.00 |
| புனித அந்தோனியார் வணக்க மாதம் (அச்சில்) | --- | 80.00 |
| புனித ஜெபமாலை மாதா வணக்க மாதம் | --- | 100.00 |

**புதுமைகள்**

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக்கிழமை, திங்கள், செவ்வாய், புதன், வியாழன் புதுமைகள் | | 80.00 |
| வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை புதுமைகள் (புதிய பதிப்பு) | | 100.00 |
| இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு – எடுத்து வாசி (பாகம் : 1, 2, 3, 4) | --- | 570.00 |
| வெரோணிக்காவின் கைகுட்டை | --- | 50.00 |
| உத்தரிக்கிற ஆன்மாக்களோடு எனது அனுபவங்கள் | --- | 100.00 |
| புதுநன்மை சான்றிதழ் (கலரில்) ஆண்-பெண் | --- | 10.00 |
| உறுதிபூசுதல் சான்றிதழ் (கலரில்) | --- | 10.00 |
| திருமண சான்றிதழ் (கலரில்) | --- | 10.00 |
| சின்ன குறிப்பிடம் | --- | 10.00 |
| பக்தி மலர் | --- | 30.00 |
| இளம் உள்ளங்களுக்கு | --- | 80.00 |

தபால் செலவு தனி

இளம் உள்ளங்களுக்கு 243



## கற்றுத்தர நான் இருக்கிறேன்

– **திரு B**. *மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**வாழ்க்கைப் பாடம்:** நாம் கற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், இவ்வுலகில் வாழ்க்கை பாடம் கற்றுத்தர நம்மை சுற்றி எங்கெங்கும், எந்த நேரத்திலும் சொல்-த்தர பலர் இருக்கிறார்கள். ஒரு நபரிடமிருந்தோ, முற்றிலும் அறிந்திராத இடத்தி-ருந்தோ, சிறிதும் எண்ணிப்பார்க்காத நபரிடமிருந்தோ கூட வாழ்க்கை பாடத்தை கற்றுக்கொள்ள முடியும்.

ஆன்மீகப் பாடங்களைகூட பல்வேறுபட்ட பொருள்களிட மிருந்தும், உயிரினங்களிடமிருந்தும், ஆன்மீகவாதிகளிட மிருந்தும் பெற முடியும்.

**குழந்தை தரும் பாடம்:** ஒரு குழந்தையிடமிருந்தும் கூட நாம் வாழ்க்கைக்கான பாடத்தை பெற முடியும். குழந்தை குழந்தைதான். ஒரு குழந்தை சிறிய மனிதன் அல்ல என்ற மனோதத்துவ அறிவியலார் கூறினாலும், ஒரு குழந்தையை கவனித்தால் அது கணநேரத்தில் வெறுப்பை வளர்க்கும் விரோதத்தை மறந்துவிட்டு, துள்ளி குதித்து புன்சிரிப்புடன் சகஜநிலைக்கு திரும்பிவிடும். நாம் மகிழ்ச்சியாக இருக்க இந்த மனநிலையை அடைய கற்றுக்கொள்ள வேண்டும்.

**மின் விசிறி தரும் பாடம்:** நாம் இருக்கும் இடத்திலேயே அமைதியாக அமர்ந்து சுற்றும் முற்றும் உற்று நோக்கினால், நம்மை சுற்றியுள்ள உயிரற்ற பொருள்களும் அருமையான வாழ்க்கை பாடத்தை கற்றுத்தரும். உதாரணத்திற்கு மின்விசிறியை எடுத்துக்கொள்வோம். அது நம்மை சுற்றி மகிழ்ச்சியை எப்படி பரவச் செய்வது என்பதை, நின்ற இடத்திலேயே சுழன்று சொல்-த் தருகிறது. எல்லா இடங்களிலும் காற்று வீற்றிருப்பது போல மகிழ்ச்சியும் எல்லா இடங்களிலும் வியாபித்திருக்கிறது. நம்மை சுற்றி பரவி இருக்கும் காற்றை உணர மின்விசிறி பொத்தானை தட்டினால் போதும். அது காற்றை நம்மீது வீசச் செய்யும். அதுபோல, நாம் பிறரிடம் அன்பாக பேசி, பழகி அவர்களின் நற்செயல்களையும், நற்குணங்களையும் பாராட்டி, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் நம் அன்பை பரவச் செய்யும்போது, மகிழ்ச்சி என்ற மின் விசிறி சுழன்று இதமான மகிழ்ச்சி என்ற தென்றலை நம்மை சுற்றி பரவச் செய்யும்.

**ஜன்னலும், கதவும் தரும் பாடம்:** ஜன்னல் ஓரமாக நின்று வெளியே உற்று பார்க்கும்போது ஓர் உண்மை புரியவரும். அறையின் நான்கு சுவற்றுக்குள்ளேயே நாம் நம்மை அடைத்துக் கொள்ளாமல் வெளி உலகை எட்டிப்பார்க்க வேண்டும், பிறரோடு நல்லுறவை பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற அருமையான உண்மை புரியும். அதுபோலவே வாயிற்கதவும் ஓர் உண்மையை புலப்படுத்துகிறது. நாம் நம்முடைய மனக்கதவை பூட்டிவைக்காமல் திறந்து வைப்பதன்மூலம் நல்ல அரிய சந்தர்ப்பங்களை உள்ளே வர வழி கிடைக்கும். மனக்கதவை எப்போதும் பூட்டி வைத்தால், மனப்புழுக்கமும், மன அழுத்தமும்தான் ஏற்படும். திறந்த மனதால் நிறைந்த மனஅமைதி ஏற்பட வாய்ப்புண்டு.

**கண்ணாடி சொல்லும் உண்மை:** நாம் தினம் தினம் பார்க்கும் முகம் பார்க்கும் கண்ணாடி பொய் சொல்லாது. உண்மையைதான் சொல்லும். கண்ணாடி ஒளிக்காமல், மறைக்காமல், உள்ளத்தை உள்ளபடி காட்டுவதுபோல, நாம் நம்முள்ளே உள்ள உண்மை நிலையை உணரவேண்டும். தினமும் கண்ணாடி முன்நின்று ஆள்காட்டி விரலால் சுட்டிகாட்டி, கண்ணாடி உணர்த்தும் பிரதிப-ப்பை உணர்ந்து நாம் நம் நெஞ்சின் ஆழத்தை அறிவோம். நம்மையும் தாண்டி நம்மை சுட்டிக்காட்ட வேறு எவருமில்லை என்பதைவிட மன அமைதி தருவது ஏது?

**நொடிக்கு நொடி:** கடிகாரத்தில் உள்ள முள்கள் மிக முக்கியமான பணிகளை செய்கின்றன. கடிகாரத்தில் தொடர்ந்து நகர்ந்துகொண்டே இருக்கும் வினாடி முள் நமக்கு சொல-த்தரும் பாடம் மிக மகத்தானது. நாம் ஒருபொழுதும் சோம்பலுடன் சோம்பி இருக்கலாகாது. அடுத்தது, அடுத்தது என்று கடிகாரத்தின் நொடி பொழுதை உணர்ந்து நகரும் முள்போல சுறுசுறுப்பாக இயங்கி நகர்ந்து கொண்டேயிருந்தால், வாழ்க்கையில் வருத்தப்பட ஏதும் இருக்காது. தினசரி நாட்காட்டியும் இதே பணியைதான் செய்கிறது. நாம் ஒவ்வொரு 24 மணி நேரத்தையும் திட்டமிட்டு பயனுள்ளதாக செய்துகொண்டே இருக்க வேண்டும்.

**தினசரி பத்திரிகை:** தினசரி பத்திரிகையை கையிலெடுக்கும் போதும், படிக்கும்போதும் ஓர் அரிய உண்மையை உணரவேண்டும். நாம் எப்போதும் நிகழ்காலத்தில் நிம்மதியாக இருக்கவே விரும்புகிறோம். ம-வு விலைக்கு கிடைத்தாலும் கூட நேற்றைய தினசரியை யாரும் வாங்கி வாசிக்க மாட்டார்கள். ஏனெனில் நேற்று என்பது நடந்து முடிந்துவிட்டது. நாளை என்பது நம் கையில் இல்லை. எனவே இன்று என்ற நிகழ்காலத்தை சரியாக செய்தால், நாளை நன்றாக இருக்கும்; நேற்றும் எண்ணிப் பார்க்கும்படி இருக்கும்.

**கடவுளே துணை:** நேற்றும், இன்றும், என்றும் வாழும் இறைவனை என்றும் மறவாமல் அவர் துணை நாடினால் மனதில் அமைதி இருக்கும், மகிழ்ச்சி பொங்கும், நிம்மதி நிலைக்கும்.


**2024 ஆம் ஆண்டிற்கான**


**அருள்வாக்கு கையேடு**

விற்பனையில் உள்ளது

தேவைப்படுவோர் மிஷன் அச்சகத்தை தொடர்பு கொள்ளவும்.

**விலை: ரூ. 160.00**

தபால் செலவு தனி



**BIBLE DIARY** ஆங்கிலத்திலும் உள்ளது

**விலை: ரூ. 230.00**

**2024 ஆம் ஆண்டிற்கான காலண்டர்**

தேவைப்படுவோர் முன்பதிவு செய்யவும்.

**விலை: ரூ. 20.00**

# பால் சொல்லும் பாடம்

- ஆரோ

- பாலுக்கு கஷ்டம் கொடுத்தால் தயிர் ஆகிறது.
- தயிருக்கு கஷ்டம்கொடுத்தால் வெண்ணெய் ஆகிறது.
- வெண்ணெயை கொடுமை செய்தால் நெய் ஆகிறது.
- பாலை விட தயிர் உயர்ந்தது, தயிரை விட வெண்ணெய் உயர்ந்தது, வெண்ணெயை விட நெய் உயர்ந்தது.
- இதனுடைய அர்த்தம் என்னவென்றால்........ அடிக்கடி கஷ்டம் - சங்கடங்கள் வந்தாலும் கூட எந்த மனிதனுடைய நிறம் மாறுவதில்லையோ, சமூகத்தில் அவருடைய மதிப்பு அதிகரிக்கிறது.
- பால் ஒரு நாளைக்கு மட்டுமே பயன்படுத்த முடியும், பின் அது கெட்டுப் போய் விடும்.
- பாலில் ஒரு சொட்டு மோர் விடும் போது அது தயிர் ஆகிறது. அது இன்னும் 2 நாட்களுக்கு இருக்கும்.
- தயிரை கடையும் போது வெண்ணெய் வருகிறது. அது இன்னும் 3 நாட்களுக்கு இருக்கும்.
- வெண்ணெயை கொதிக்க வைத்தால் நெய் ஆகிறது. அது ஒரு போதும் வீணாவது இல்லை.
- ஒரே நாளில் கெட்டுப் போகும் பாலுக்குள் ஒரு போதும் கெட்டுப் போகாத நெய் ஒளிந்து இருக்கிறது.
- உங்கள் மனம் கூட அளவற்ற சக்திகளால் நிரம்பியுள்ளது. அதில் கொஞ்சம் நேர்மையான எண்ணங்களைப் போடுங்கள். தனக்குத் தானே சிந்தனை செய்யுங்கள்.
- தன்னுடைய வாழ்க்கையை இன்னும் சரி பாருங்கள். பின் அப்பொழுது பாருங்கள். நீங்கள் ஒருபொழுதும் தோல்வியே காணாத பசுமையான மனிதனாக இருப்பீர்கள்.

# முதலீடு



திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3

அருளப்பன் வேலையிலிருந்து தாமதமாகவும் சோர்வாகவும் வீட்டிற்கு வந்தார். பத்து வயது மகன் ஜோசுவா வாசலில் காத்திருப்பதைக் கண்டார். முகம் கழுவி சோபாவில் அமர்ந்ததும், மகன் அவரிடம் வந்து, ''அப்பா, நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா?

அப்பா : "கேள்''.

மகன் : ''நீங்கள், ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள்?''

அப்பா : ''அதைத் தெரிந்து நீ என்ன செய்யப் போகிறாய்?''

மகன் : ''எனக்குத் தெரியவேண்டும். தயவு செய்து சொல்லுங்கள்.''

அப்பா : ''ஒரு மணி நேரத்திற்கு இரு நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன்.''

மகன் : ''அப்படியானால் எனக்கு நூறு ரூபாய் கடனாகத் தருவீர்களா?'' கோபமடைந்த தந்தை, ''எதற்கு நூறு ரூபாய்? போய்த் தூங்கு,'' என்றார்.

சிறுவன் அமைதியாகத் தலைக் கவிழ்ந்தவாறு சென்றுவிட்டான். தந்தைக்குக் கோபம் தீரவில்லை. சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, அமைதியாகி, யோசிக்கத் தொடங்கினார்: ''நூறு ரூபாய்க்கு ஏதாவது வாங்க ஆசைப்படுகிறானோ! அப்படி என்ன வாங்கப் போகிறான்? அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்யமாட்டானே.''

சிறிது நேரங்கழித்து, மகனிடம் சென்று,''தூங்கிவிட்டாயா, ஜோசு? என்று கேட்டார். ''இல்லை அப்பா, விழித்திருக்கிறேன்.

''அழாதே. இந்தா நீ கேட்ட நூறு ரூபாய்'' என்று அவன் கையில் நூறு ரூபாய் நோட்டைத் திணித்தார். சிறுவன் சிரித்துக்கொண்டே,'' நன்றி அப்பா! என்று படுக்கையைவிட்டு எழுந்து தந்தையைக் கட்டிக் கொண்டான்.

பின்னர், தலையணைக்கு அடியில் இருந்து சில கசங்கிய ரூபாய் நோட்டுகளை எடுத்து தனது சேமிப்பைப் பொறுமையாக எண்ணினான். அதைப் பார்த்த அருளப்பன், ''உன்னிடம் தான் பணம் இருக்கிறதே! பிறகு, எதற்கு இந்த நூறு ரூபாய்? தந்தை மீண்டும் கோபமுற்றார்.

''எனக்கு இன்னும் கொஞ்சம் தேவைப்பட்டது என்று பதிலளித்த ஜோசுவா,'' அப்பா, இந்தாங்க இருநூறு ரூபாய். நீங்க சம்பாதிக்க செலவிடும் நேரத்தில் ஒரு மணி நேரத்திற்கான பணம். நாளைக்கு சீக்கிரமா வீட்டுக்கு வந்துடுங்க. நான் உங்களுடன் சேர்ந்து சாப்பிட விரும்புகிறேன்.

செவிட்டில் அறைந்தது போலிருந்தது தந்தைக்கு.

''நாம் இறந்து போனால், பணிபுரியும் நிறுவனத்தில் வேறொருவரை நியமித்து விடுவார்கள். ஆனால், நம் குடும்பத்தினரும் நண்பர்களும்தான் இழப்பை உணர்வார்கள்.'' தமது சொந்தக் குடும்பத்தை நல்லமுறையில் நடத்தி, தம் பிள்ளைகள் பணிவுடனும் மிகுந்த கண்ணியத்துடனும் வளர ஆவன செய்பவராக இருக்கவேண்டும். (1 தீமோத்தேயு 3:4)'' என்று திருவிவிலியத்தில் வாசித்தது நினைவுக்கு வந்தது. குடும்பத்தைவிட வேலைக்கு முக்கியத்துவம் தருவது ஒரு விவேகமற்ற முதலீடு என்பதும் புரிந்தது.



# நூறாண்டு காலம் வாழ்க

- **திரு. அல்போன்ஸ் மோசஸ்** புதுச்சேரி-9.

ஒருமுறை பெரும் பணக்காரர் தனது விலைமதிப்பில்லாத காரை புதைக்க விரும்புவதாகவும் பார்க்க விரும்புகிறவர்கள் வந்து பார்க்கலாம் எனவும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திருந்தார்.

அந்த விளம்பரத்தைப் பார்த்த அனைவரும் அவரை பைத்தியக்காரன் என்றார்கள். காரைப் புதைப்பதற்கான தேதியும் வந்தது. எல்லோரும் அங்கு நடப்பதை வேடிக்கை பார்க்க கூடினர். காரை புதைக்கும் அளவிற்கு பள்ளம் வெட்டப்பட்டிருந்தது. பக்கத்தில் புதிய காரும் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்த இடத்திற்கு பணக்காரரும் வந்து சேர்ந்தார். ஐயா இவ்வளவு விலை மதிப்புள்ள காரை புதைக்க விரும்புகின்றீர்களே என்ன காரணம் என்றார்கள். இது விலைமதிப்பில்லாத கார்தான் ஆனால் அதன் பயன்பாடு குறைந்து விட்டது. அதன் பல இயந்திர பகுதிகள் தேய்ந்து விட்டன என்றார். புதிய கார்தானே அதற்குள் எப்படி தேய்மானம் ஆகும் என்று நிருபர்கள் கேட்டார்கள்.

ஆம் அதைச் சொல்லத்தான் உங்களை இங்கு அழைத்திருக்கின்றேன் என்றார் பணக்காரர். இந்த உடலும் காரும் ஒன்றுதான். இரண்டையும் நாம் பெறும்போது புத்தம் புதுசுதான் ஆனால் அதை நாம் பயன்படுத்துவதைப் பொருத்து அதன் பயன்பாடு அமைந்து விடுகின்றது.

நமது உடலுக்கு தேவையில்லாத போதைப் பொருள், தீய பழக்க வழக்கங்கள் போன்றவற்றால் நமது உடலை நாமே கெடுத்துக் கொள்கின்றோம். இருந்தபோதிலும் நமது உடலில் உள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதற்குரிய பணியைச் செய்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு உறுப்பும் அதன் பணியைச் செய்து முடிக்க இரண்டு மணி நேரம் ஒதுக்கியுள்ளது. இரண்டு மணி ரேம் முடிந்ததும் மீண்டும் அடுத்த உறுப்பு செயல்பட ஆரம்பிக்கும். இவ்வாறு தொடர்ந்து உடல் உறுப்புகள் தன் வேலையைச் செய்து கொண்டிருப்பதால்தான் நாம் நலமாக வாழ்கின்றோம்.

காலை 3 மணி முதல் 5 மணி வரை நுரையீரலின் நேரம். இந்த நேரத்தில் சுவாசப்பயிற்சி செய்து பிராண சக்தியைச் சேர்க்க வேண்டும். காலை 5 மணி முதல் 7 மணி வரை பெருங்குடலின் நேரம். காலைக் கடன்களை முடிக்க வேண்டும். காலை 7 மணி முதல் 9 மணி வரை வயிற்றின் நேரம் இந்த நேரத்தில் கல்லைத் தின்றாலும் வயிறு அரைத்து விடும். காலை உணவை பேரரசன் போல உண்ண வேண்டும் என்பார்கள்.

காலை 9 மணி முதல் மண்ணிரலின் நேரம். காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச் சத்தாகவும் இரத்தமாகவும் மாற்றுகின்ற நேரம். இந்த நேரத்தில் எதுவும் உண்ணக்கூடாது. அடுத்தது. 11 மணி முதல் 1 மணி வரை இதயத்தின் நேரம் இந்த நேரத்தில் அதிகமாகப் பேசுவது, கோபப்படுதல், அதிகமாகப் படபடத்தல் கூடாது இதயம் பாதிக்கப்படும்.

பிற்பகல் 1 முதல் 3 வரை சிறுகுடலின் நேரம். இந்த நேரத்தில் மதிய உணவை உட்கொண்டு சற்று ஒய்வெடுக்க வேண்டும். மதியம் 3 முதல் 5 வரை சிறுநீர்ப்பையின் நேரம் சிறுநீர்க்கழிவுகளை வெளியேற்ற சிறந்த நேரம். மாலை 5 முதல் 7 வரை சிறுநீரகங்களின் நேரம். அமைதிபெற தியானம் செய்ய வழிபட உகந்த நேரம் இரவு 7 முதல் 9 வரை பெரிகார்டியத்தின் நேரம். இது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு ஜவ்வு பணிசெய்யும் நேரம். இரவு உணவிற்கு உகந்த நேரம். இரவு 9 முதல் 11 வரை டிரிப்பிள் கீட்டர் அதாவது உச்சந்தலை முதல் அடி வயிறு வரை உள்ள மூன்று பகுதிகளை இணைக்கும் பாதை. இந்த நேரத்தில் உறங்குவது நல்லது.

இரவு 11 முதல் 1 மணி வரை பித்தப்பை இயங்கும் நேரம். இந்த நேரத்தில் தூங்கவில்லை என்றால் பித்தப்பை குறைபாடுகள் ஏற்படும். அதிகாலை 1 முதல் வரை கல்லீரலின் நேரம். கட்டாயம் படுத்திருக்க வேண்டிய நேரம். உடல் முழுவதும் ஓடும் இரத்தத்தை கல்லீரல் தன்னிடத்தே வரவழைத்து சுத்திகரிக்கும் நேரம்.

உடல் உறுப்புகளின் வேலை நேர அட்டவணைப்பற்றி நமக்கு அதிகம் தெரியாததால் உடலைப் பற்றியக் கவலை இன்றி வாழ்ந்து வருகின்றோம். அதனால் இயந்திரம் பழுதடைந்து சீக்கிரம் இறக்க நேரிடுகின்றது. உடலோடு ஒத்துழைப்போம். நூறாண்டு காலம் வாழ்வோம் என்றார் பணக்காரர். உடலைப் பற்றிய உண்மை எல்லோருக்கும் புரிந்தது.


## மிஷன் அச்சகத்தில்




| | |
|---|---|
| ஆசியுரையும் | |
| மந்திரிப்புகளும் | ரூ. 170.00 |
| திருவாழ்வு | ரூ. 150.00 |
| திரு குடும்ப | |
| பக்தி மாலை | ரூ. 200.00 |
| ORDO | ரூ.60.00 |



## 21ஆம் ஆண்டின் நற்செய்திப் பணியில் புனித பேதுரு விவி–ய குறுக்கெழுத்து போட்டி – 243

**நவம்பர் மாத வெளியீடு**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - சேவூர்.



இறையேசுவில் பிரியமுள்ள இறைமக்களே

வாரம் தவறாமல் 117 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். மனிதனின் இயல்பு பத்து விரல்கள் தன்னிடம் இருந்தாலும் இன்னொருவரின் விரல் தன் கண்ணீரைத் துடைக்குமா என எதிர்பார்க்கும். உங்கள் வாழ்க்கைப் பாதையில் செல்ல மற்றவர்களிடம் வழி கேட்காதீர்கள் நம்பிக்கை எனும் ஒளி என்றென்றும் உங்களுடைய மனதில் நிலையாக இருந்தால் எப்படிப்பட்ட இருள் சூழ்ந்த நிலைகளையும் சுலபமாக கடந்து செல்வீர்கள். எதுவும் ஓர் இரவில் நிகழவில்லை. எல்லாவற்றையும் ஏற்றுகொள்ள ஓர் ஆயிரம் இரவுகள் போதவில்லை. ஏதோ ஓர் நம்பிக்கையை மட்டும் மனம் இறுகப் பிடித்துக்கொணடு இன்று வரை நகர்கிறது நாட்கள். உங்கள் உலகம் உங்களிடமிருந்தே தொடங்குகிறது என்பதை முழுமையாக உணர்ந்து மனிதன் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுந்து புதுவாழ்வு வாழ்ந்து என்றும் மகிழ்ச்சியாய் வாழ வாழ்த்துகிறேன். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறை ஊழியன்
அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ்

**இடமிருந்து வலம்**

1. மலையைத் தொடுபவர் யாரானாலும் கொல்லப்படுவது -------- .
3. மக்களைப்------------- அவன் மறுக்கிறான்.
4. இஸ்ரயேல் என் ---------------
8. ----------- கள் வழியாய் அதன்மேல் ஏறிச் செல்ல வேண்டாம்.
10. நாசியின் மூச்சால் நீர்த் ------------ குவிந்தன.
12. அதன் ------------ மூன்று முழம்.
14. தீயவருக்குக் ----------- வேண்டாம்.
17. பதினொரு மூடு திரைகளுக்கும் ------------- ஒன்றே.
20. ------------- கைகள் தளர்ந்து போயின.

**வலமிருந்து வலம்**

8. மார்புப் --------- மூலைகளிலுள்ள இரு வளையங்களில்.
11. தலைமுறையாக என் நினைவுச் ------------ இதுவே.
13. பாலைநிலத்தில் ----------- நான் உங்களைப் போக விடுவேன்.
15. ---------- அருகில் வரலாகாது.
16. நீங்கள் ------------- க்க நாங்கள் யார்?
17. விளிம்பில் --------------- வளையங்கள் ஐம்பது.
19. ஆண்டவர் ---------------- அகல்களை ஏற்றினார்.

**மே-ருந்து கீழ்**

2. அனைவரையும் ----------- நான் மாட்சியுறுவேன்.
5. நீ கீழே இறங்கிச் ---------- ஆரோனுடன் மேலேறிவா.
6. அவனைத் தன்மகன் எனக் ------------.
9. ----------- ஆண்டவர் கட்டளையிட்ட அனைத்தையும்.
14. ---------- வாங்காதே.
15. ----------- கைவண்ணமிக்க கச்சையால் கட்டுவாய்.
17. அவர்களின் ------------ பொழிவு தலைமுறை தோறும் நிலை நிற்கும்.

**கீழிருந்து மேல்**

1. நல்லெண்ணம் ---------- கச் செய்தார் ஆண்டவர்.
4. கதிரவன் ----------- வரை ஒரே நிலையில் இருந்தன.
7. அவர்கள் ----------- கொண்டவர்கள்.
9. அவர்களை நோக்கி -------- இப்படிச்செய்து .
11. அவர் --------- மரத்தால் தூப பீடம் செய்தார்.
12. ----------- அதை ஏற்றுக் கொள்வார்.
13. எக்காலமும் அவனுக்குப் ------------ செய்வான்.
15. ----------- களுக்குப் புளிப்பற்ற அப்பங்களையே உண்ணுங்கள்.
18. அவற்றின் ---------- ஆணிகளையும் செய்தார்.
19. அதை சந்திப்புக் கூடாரத் ---------- க் கென்று கொடுத்து விடு

**குறிப்பு:**

1. ஆசிரியரின் இறுதித்தீர்ப்பே முடிவு
2. பதில்களை 30.11.2023 க்குள் அனுப்பி வைக்கவும்.
3. பதிலை அதிகாரம் வசனத்துடன் சரியான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.
4. மதிப்பெண்கள் அடிப்படையில் குலுக்கல்முறையில் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் டிசம்பர் மாதம்15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.
5. ஒவ்வொரு மாதமும் பரிசு வழங்க விருப்பம் உள்ளவர்கள் முன் கூட்டியே எனது அலைபேசி எண்களுக்கு தெரியப்படுத்தவும்.
6. 2023-நவம்பர் மாதம் முதல் 2024 அக்டோபர் வரை ஓராண்டிற்கு விவிலியப் போட்டியில் பங்கு பெறுவோருக்கு சான்றிதழும் ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

**விடுதலைப் பயணம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 6 | | | | | | 17 | | |
| | | ■ | | | 5 | | | | |
| | | | | | | 7 | | | 18 |
| | | 9 | | 1 | | | 2 | | |
| | | | 15 | | | | | 11 | |
| | | | | ■ | | | | 16 | |
| | | | 3 | | | | | | 13 |
| | | | 10 | | | | | ■ | |
| | 4 | ■ | | | | | 8 | | |
| 12 | | | 20 | | | | | | 19 |

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் **M.A.,MA.,B.Ed.,HM**
தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி - 243
ஆயர் அம்புரோஸ் **ITI,**
சத்தி ரோடு, சேவூர் - **Post** அவிநாசி - **Tk,**
திருப்பூர் மாவட்டம் - 641 655
**Cell : 99423 11068, 95979 75430**

## விண்ணக வாழ்வின் 6–ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 12-06-1933

மறைவு 04-11-2017

மேதகு பேராயர் டாக்டர்

**S.மைக்கேல் அகஸ்டின்** D.D.,Ph.D.,

**குருப்பட்டம் 15-06-1961**

**ஆயர்பட்டம் 29-03-1978**

"ஆண்டவரின் கையில் நீர் அழகிய மணிமுடியாகத் திகழ்வீர்" – எசா.62.3

எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பேராயரே! "பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும் இன்னும் பிறவாமை வேண்டும் – பிறந்தால் நின்னை மறவாமை வேண்டும்" என்ற பரிபாடல் வரிகளுக்கேற்ப உன் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட அன்பு சீலரே! **ஆகட்டும்** என்ற அன்னை மரியாவின் ஆன்மீகத்தை உமது விருதுவாக்காக ஏற்று வாழ்ந்த அடியாரே! நீவிர் நித்திய இளைப்பாற்றி அடைய உமக்காக செபிக்கிறோம். முடிவில்லாத பேரின்ப ஒளி உம்மேல் ஒளிர்வதாக!

நவம்பர் மாதம் 4–ம் தேதி (04–11–2023) சனிக்கிழமை அன்று, காலை 6.00 புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் பேராயருக்காக கூட்டு பாடற் திருப்பலி நிறைவேற்றப்படும். திருப்பலிக்குப்பின் பேராயர் மைக்கேல் அகஸ்டின் ஆண்டகை அவர்களது கல்லறை மந்திரிக்கப்படும். அனைவரும் இதில் கலந்துகொண்டு நமது முன்னாள் பேராயருக்காக செபிக்க அழைக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**

**அருள்பணி R. ஜோசப்ராஜ்**

**அருள்பணி Z. ஜான் சிரில், அருள்பணி S.ஜான்சன்**

**மற்றும் குடும்பத்தார்.**

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 17-10-1932



இறப்பு: 11-11-2015

**திரு. A. மைக்கேல்துரை**

(Rtd. EID PARRY, Nellikuppam)

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்" யோவான் 11:25*

**திருப்பலி:** இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 11–11–2023 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், நெல்லிக்குப்பம் புனித சூசையப்பர் ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்


**தம்பி, பிள்ளைகள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

**2023–2024 ஆண்டிற்கான சந்தா செலுத்தி விட்டீர்களா? சந்தாவை புதுப்பிக்கும்போது உங்கள் சந்தா எண்ணை மறக்காமல் குறிப்பிடவும்.**

**ரூ. 200/– மட்டுமே**

## விண்ணக வாழ்வின் 50-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 10-01-1905



மறைவு: 07-11-1973

**தமியன் லூர்துசாமி**

**தமியன் ஆரோக்கியமரி**

*"ஆண்டவர் என்னைத் தம் அன்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளார்"* - திபா 4:3

**திருப்பலி:** இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக 07-11-2023 செவ்வாய் காலை 6.15 மணிக்கு முருங்கப்பாக்கம் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**மகள், மருமகள், மருமகன்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.**

முருங்கப்பாக்கம்.

## விண்ணக வாழ்வின் 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 25-09-1927



மறைவு: 05-11-2014

**Rev.Fr.S.கிறிஸ்தோபர்**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவா.11:25*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05–11–2023 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு திண்டிவனம், புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும் திருப்பலி-கள் நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இக்குருவின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**M.Durairaj & Family.**

# இறைவனை இனம் காண்போம்

வெளியே கொளுத்தும் வெயில், வீட்டிற்குள் அடைபட்டிருப்பீர்கள் கையிலிருக்கும் மொபைல் போனை குருகருவென பார்த்தபடி, இந்த ஸ்மார்ட்போனில் அடிக்கடி செல்பி எடுத்து பிறருக்கு அனுப்புவது இன்றைய வாடிக்கையாகிவிட்டது.



முதன் முதலில் செல்பி போட்டோ எடுத்தவர் யார் என்று தெரியுமா? பிலடெல்பியாவை சேர்ந்த ராபர்ட் கார்னிலியஸ் என்பவர் 1839ம் ஆண்டு முதன் முதலில் தனது பழைய கேமிராவைக் கொண்டு தன்னையே புகைப்படம் எடுத்துக்கொண்டாராம் - இது வரலாற்று பதிவு.

நமது முகத்தை அழகென்று காட்ட வீட்டில் முகம் பார்க்கும் கண்ணாடி இருக்கும்போது எதற்கு செல்பி? என்று கேட்போரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

என்னில் நிகழும் மாற்றத்தை அடிக்கடி நான் பார்த்தால் போதுமா? மற்றவருக்கு காட்டத்தான் இந்த செல்பி. நகர்ப்புறங்களில், பெண்கள் தான் அதிகம் செலிபி எடுப்பதாக ஒரு ஆதரமற்ற தகவலும் உண்டு. விடுமுறையில், அடுத்த வீட்டு பிள்ளைகளோடு ஆடி ஓடி விளையாடிய பிள்ளைகளை இந்த ஸ்மார்ட் போனும், கம்ப்யூட்டர் கேமும், வீடியோ கேமும் வீட்டிற்குள் அடைத்து விட்டன. நம்மை நாமே புகைப்படம் எடுக்கும் இந்த செல்பி முறை இன்னும் சற்று நீண்டு நமது ஆன்மாவை புகைப்படும் எடுக்குமா? ஆன்மாவை சுய பரிசீலனை செய்ய இன்னும் மின்னனுவியல் உபகரணங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை.


இறைவன் உறையும் ஆன்மாவை அணுக முடியாத செயற்கையின் தோல்வி பற்றி நாம் சிந்தித்திருக் கிறோமா?

இறைவன் இயற்கை அனைத்தையும் படைத்தார். மனிதன் செயற்கையால் அதனை அழித்து இவ்வுலகை இயந்திரமயமாக்கி கொண்டிருக்கிறான்.

பலுகி, பெருகி இப்பூமியை நிரப்புங்கள் என்று இறைவன் சொன்னார். இந்த பூமியை கூறுபோட்டு குடைந்தெடுத்து, காடுகளை அழித்து கனிம வளங்களை சுரண்டும் மனிதன் மீது இயற்கையின் தாக்கம்தான் இந்த வெள்ளமும், சுட்டெரிக்கும் வெயிலும்.

**இயற்கையின் இயல்பிலே இறைவனை இனம் காண்போம்**

- மௌனகுரு



# புனிதப் பெருமகள்

(புனித அல்போன்சாவின் அற்புத வரலாறு)

- Dr. தீபக் தாமஸ்,
பல் மருத்துவர், புதுவை.



தேதி குறித்துவிட்டு
சொல்கிறேன்
கல்யாணத்தன்று
வந்து உட்கார் போதும்
என்று கட்டளையிட்டாள் பெரியன்னை.

அன்னக்குட்டி
அடக்கமாய் இருப்பவள்தான்.
ஆனால்
அடங்கி இருப்பவள் அல்லவே!

இலட்சியத்தை
அலட்சியம் செய்தால்
எங்ஙனம் பொறுப்பாள்.
அன்புடன் வேண்டினாள்.
புரிய வைக்க முயன்றாள்.

சொல்– புரிய வைக்க
இயலாத பொழுது
செய்துதான் புரிய வைக்க
வேண்டுமென்று முடிவெடுத்தாள்.
வீட்டிற்கு வெளியே வந்தாள்.

நெற்பதர்
நெருப்பில்
எரிந்து கொண்டிருந்தது.

அழகால் தானே
இத்தனை ஆபத்தும்
அது ஒழியட்டும்.

தீர்மானத்துடன்
பற்றியெரிந்து கொண்டிருந்த
தீயில் பாதம் சொருகினாள்.

வெந்து
கருகியது கால்.

அலறியடித்து
ஓடி வந்தாள் பெரியன்னை.

பொன்னால் வேயப் பார்த்தேன்.
புண்ணாக்கி கொண்டு நிற்கிறாயே.
இதற்காகவா
இத்தனை கனா கண்டேன்
பாசத்தால் பைத்தியம் போலானாள் பெரியன்னை.

➔ தொடரும்...

Published and Printed by Rev. Fr. A.S.P. AUGUSTE on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,
Archbishop of Pondicherry - Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.A.S.P.Auguste. Manager : Rev.Fr.A.S.P.Auguste.